

Tamil Comics Ulagam - King Viswa


HAPPY
1986
வாசகர்களுக்கு
எமது
புத்தாண்டு + பொங்கல்
வாழ்த்துக்கள்!
லயன் காமிக்ஸ்.
லயன்
காமிக்ஸ்


இரும்புக்கை
உளவாளி
தோன்றும்
மனித
எரிமலை!
லயன்
காமிக்ஸ்
பொங்கல்
ஸ்பெஷல்!


பாரிஸ் - 1940 ஜெர்மானிய போர்முகாம் ஒன்றில் கடுத்தமானதொரு விசாரணை நடந்து கொண்டிருந்தது
நார்மன்...நீ ஒரு பிரிட்டிஷ் உளவாளி என்பதை தீர்மானமாக தெரிந்து கொண்டு விட்டோம்...இனியும் நீ பிடிவாதம் பிடிப்பதில் அர்த்தமேயில்லை...வாயைத் திறந்து பேசு...ம்
தாக்குப் பிடிக்கும் திறன் ஆளுக்கு ஆள் மாறுபடும்... உன் எல்லை எது என்று இப்போது சோதித்துப் பார்த்து விடலாம்!
"பாரிஸ் வெறிநாய்" என்று உன்னை அழைக்கிறார்கள் என்றால் அதில் அர்த்தமிருக்கிறது லூதல்...ஆனால் என்னை வாயைத் திறக்கவைக்க உன்னால் ஆகாது...
ம்—இவனுடைய கட்டுக்களை அவிழ்த்து எறியுங்கள்!


வேண்டாம்...மறுபடியும் என் கையை சிதைக்கா தீர்கள்...ஆ—ஐயோ...!
உளவாளியான உனக்கு கை மிகவும் பயனுள்ள உறுப்பு. கொஞ்சம் கொஞ்சமாக அது கொத்துக்கறியாவதை உன்னால் தாங்கிக் கொள்ள முடிகிறதா பார்க்கலாம்!
இந்த சித்ரவதையை தவிர்த்துக் கொள்ளும் வழி என்ன என்பது நீ அறியாததல்ல!
நோ, மாட்டேன்— நடக்காது ஒருபோதும்!
ஒருமணி நேரம் நீடித்த அந்த வதைப் படலம் ஓய்ந்தது...
மீண்டும் அவனுடைய அறைக்குள் கொண்டு போய் அடையுங்கள்- மிச்சத்தை நாளை தொடரலாம்!
ஊஹும்...நிலைமை இப்படியே நீடிக்குமானால் என்னைப் பலிகொண்டு விடுவான் இந்தக் கிராதகன். நான் ஏதாவது செய்தாக வேண்டும் - உடனடியாக! ம்...அந்த ஜன்னல்—
விலகிப் போ... சனியனே!
ஆவ்...!



தளர்ந்து போன நிலையிலும்
படு ஆபத்தானவனாக இருக்
கிறானே...பிடியுங்கள் அவனை!
எகிறி இந்தச்சுவரை பற்றிக்
கொள்ள முடிந்தால் தப்பிக்க
வழி பிறக்கக் கூடும்!
வலுவிழந்த என் வலது கையால்
பயனேதுமில்லை - இறுக பற்றிக்
கொள்ள இயலவில்லையே!
ஆ...ஆவ்...!


பொறு...உன் தோட்டாவை வீணடிக்காதே! இவனை புதைக்கும் பணியை பிரிட்டிஷாரிடமே ஒப்படைத்து விட-லாம்...''பாரிஸ் வெறி நாயிடம்'' வாலாட்டினால் என்ன நேரும் என்று மற்ற பிரிட்டிஷ் உளவாளிகளுக்கு இது ஒரு எச்சரிக்கையாக அமையட்டும்!
இன்னும் உயிர் இருக்கிறது... ஆனால் இத்தனை உயரத்திலிருந்து விழுந்தவன் பிழைத்து எழப்போவதில்லை... இவனிடமிருந்து எந்த தகவலையும் வரவழைக்க இனி வாய்ப்பில்லை - கர்னல்!
அன்றிரவு ஜெர்மானிய குண்டு வீசும் விமானம் ஒன்று எதிர் படைகளின் எல்லைக்குள் வித்தியாசமானதொரு மூட்டையை வீசிவிட்டுச் சென்றது!
பாரசூட்...எதிரிகள் எதை இங்கே இறக்கிப் போட்டுவிட்டுப் போகி-றார்களோ தெரியவில்லையே?
அட...ஒரு ஆசாமி-உயிர் இருக்கிறதோ என்னவோ?


அருகே இருந்த மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நார்மனுக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சை ஒன்று நடந்தது...
ஜீரம் வெகுவாக குறைந்து விட்டது டாக்டர்...பிழைத்துக் கொண்டு விடுவார் என்று தோன்றுகிறது...
நம்பமுடியாத விந்தை! என் கணிப்பின்படி இவன் ஒருமணி நேரத்திற்கு முன்பே இறந்து போயிருக்க வேண்டும்!
நார்மனின் உடலோடு உயிர் ஒட்டிக் கொண்டிருக்க அழுத்தமான காரணம் ஒன்று இருந்தது...தன் மனப் பிரமையில் தோன்றிய உருவெளிக் காட்சியில் தான் அடியோடு வெறுத்த மனிதனைக் கண்டான்...
அலட்டிக் கொள்ளாதே நார்மன், அமைதியாக மரணத்தை ஏற்றுக் கொண்டு விடு!
மாட்டேன்...உன்னை பழிவாங்காமல் சாக மாட்டேன் வெறியனே!
இது நடந்து இரண்டு மாதங்களுக்குப் பின் உளவுப்படை தலைவர் மேஜர் பிரைட் அந்த மருத்துவமனைக்கு வந்தார்...
ஒருவழியாக உங்கள் ஆசாமியை காப்பாற்றி விட்டோம் மேஜர், ஆனால் அவனுடைய வலது கை இனி பயன்படாது. அத்தோடு இன்னொரு விஷயம்- ''பாரிஸ் வெறிநாய்'' என்று கத்திக் கொண்டே அடிக்கடி தூக்கத்தில் கொதிப் படைகிறான்!
டிஸ்சார்ஜ் ஆனதும் நான்கு மாதம் லீவு எடுத்துக்கொள்...நீ நன்றாக ஓய்வெடுத்த பின்னர் நம்முடைய எடின்பரோ கிளையில் உனக்கு எழுத்தர் வேலை ஏதாவது ஏற்பாடு செய்கிறேன்.
எடின்பரோவிலா...? - பாரிஸில் எனக்கு ஒரு முக்கியமான வேலை பாக்கியிருக்கிறது!


முட்டாள் தனமாக பேசாதே நார்மன்! உன் உடல்நிலை சீராகிவிட்ட போதிலும் நீ அடைந்த பயங்கர அனுபவம் உன் உள்ளத்தில் ஆழமான வடுவை ஏற்படுத்திவிட்டிருக்கிறது!
...லூதலை மறந்துவிடு - பழிவாங்கும் எண்ணத்தை கைவிடு! மீண்டும் உளவுப் பணியில் ஈடுபடுத்தி உன் உயிரைப் பணயம் வைக்க நான் தயாரில்லை!
மறப்பதா? அது எப்படி சாத்தியம் நிரந்தரமாக உருகுலைந்து போன இந்தக் கை ஒவ்வொரு கணமும் எனக்கு அவனை நினைவூட்டிக் கொண்டிருக்குமே! இந்த அரக்கத்தனமான செயலுக்குரிய விலையை அவன் செலுத்தியே தீர வேண்டும்!
இரண்டு வாரங்களுக்குப் பின் நார்மன் மருத்துவமனையிலிருந்து அனுப்பப் பட்டான்...சில தினங்களுக்கு அவன் எங்கே போனான் என்ற தகவலே இல்லை...பின்னர் - எஸ்ஸெக்ஸ் புறநகர் பகுதியொன்றிலிருந்த பட்டறையில்...
ஜான்...எதையுமே செய்துவிட முடியும் என்று அடிக்கடி பீற்றிக் கொள்வாயே, இதோ இந்த வரைபடத்திலுள்ளபடி எனக்கு நீ செய்து கொடு.பார்ப்போம்!
எனக்கு இது முடியாத காரியமல்லதான்! ஆனால்...நீ உளவுத் துறையிலிருந்து விலக்கப்பட்டுவிட்டதாக கேள்விப் பட்டேனே!


நீண்டநாள் நண்பனாயிற்றே என்று பார்க்கிறேன்... இல்லையேல் உன்னை-
ஹே...ஆத்திரப்படாதே நார்மன்-உன் இஷ்டப் படியே செய்துகொடுக் கிறேன்...கையை எடு!



அடுத்த சில தினங்களுக்கு நார்மன் அந்த பட்டறை-யிலேயே தங்கி ஓய்வெடுத் தார்...ஜான் மும்முரமாக காரியத்தில் ஈடுபட்டான்...
நார்மன் ரொம்பவும் மாறிப்போய் விட்டான்...இத்தனை முரட்டுத்தனம் முன்பு கிடையாது அவனிடம்! தினமும் இடது கையால் கடுத்த-மான பயிற்சிகளை செய்து வலது கையின் திறனை அது பெறவேண்டும் என்று எதிர்பார்க்கிறான்!


ஜானின் பணி ஒருவாறு முடிந்தது...
இந்தா...சரியாக இருக்கிறதா என்று மாட்டிப்பார்!
பிரமாதமாக இருக்கிறது.. ஜான்!
உள்ளங்கையிலுள்ள மோட்டார் அமைப்பின் இயக்கத்தினால் ஒவ்வொரு விரலும் இயங்கும்...அத்தோடு அவற்றின் செயல் திறன் அபாரமானதாக இருக்கும்!


இந்தக்கம்பி வலையை மிகச் சுலபமாக பிய்த்தெறிய முடிகிறதே!
பிரமாதம்... மிகப் பிரமாதம் ஜான்!
நீ ஒரு பெரிய தப்பு செய்து விட்டாய் லூதல்! கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி என்னை நீ அன்றே ஒழித்துக் கட்டியிருக்க வேண்டும். எந்தக் கையை நீ சிதைத்து உருக் குலைத்தாயோ அதே கையால் உன்னைக் கொல்வேன் — இது சத்தியம்!



அத்தியாயம்—2 வேட்டை!
நள்ளிரவு வேளை—
சிறிய மீன்பிடி மோட்டார் படகு ஒன்று ஆங்கிலக் கால்வாயின் குறுக்கே அதிக ஓசை எழுப்பாமல் பிரெஞ்ச் கடற்கரையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது—அதில்...
...தாக்குப் பிடிக்கும் திறன் ஆளுக்கு ஆள் மாறுபடும்!
...உன் எல்லே எது என்று இப்போது சோதித்துப் பார்த்து விடலாம்!
கொஞ்சம் கொஞ்சமாக உன்னுடைய கை கொத்துக் கறியாக சிதைக்கப்படும் போது எப்படி நீ தாக்குப் பிடிக்கிருய் பார்ப்போம்!
நோ...நோ—ஆ!


என் மண்டைக்குள்ளே இருந்து கொண்டு சித்திரவதை செய்யாதே லூதல்...போ...போய்த் தொலை சனியனே!
மறுபடியும் மனப்பிரமை நார்மனை ஆட்டிப்படைக்கிறது போலும்...காப்டன்!
ஜெர்மானியர்கள் அவனுடைய கையை உருக்குலைக்கும் வரை திறமையான பிரிட்டிஷ் உளவாளி-யாக இருந்தவன் இந்த நார்மன்... கையை இழந்தபின் உலோகத்தாலான செயற்கை கரம் பொருத்திக் கொண்டுவிட்டான்... இப்போது அவனுடைய எண்ணம் முழுவதும் பழிவாங்கும் நோக்கம் தான்!


திடீரென்று...
அதோ... விளக்கொளி! ஜெர்-மானியர்களின் ரோந்துப் படகு அது என்று நினைக்கிறேன்!
படகை திருப்பி விடுவாயோ-எடு... கையை!.
அஹ...!
பிரெஞ்ச் எல்லைக்கு அவனை கொண்டு செல்லத்தான் நார்மன் நமக்கு பணம் கொடுத்திருக்கிறானேயன்றி ஜெர்மானிய கப்பல் படையோடு சண்டை போட அல்ல...படகை திசை திருப்பி விலகிச் சென்று விடுவோம்!


சே...என்ன மடத்தனமான காரியம்-லூதலேப் பற்றிய சிந்தனே என்னே வெறியனுக்குகிறது!
மரியாதையாக படகை தொடர்ந்து எதிர் கரையை நோக்கி செலுத்து...
ஆ...உன்னுடைய உலோகக் கை— வே...வேண்டாம் நார்மன்!
ஸாரி காப்டன்! இந்த உலோகக் கையை எனக்குக் கொடுத்த கிராதகன் பாரிஸில் காத்துக் கொண்டிருக் கிறுன்! எந்த ஜெர்மானிய படையும் அங்கே செல் வதைத் தடுத்து நிறுத்த முடியாது!
ஜெர்மானிய ரோந்துப் படகு நெருங்கி வந்து சேர்ந்தது...
உங்கள் அனேவரையும் கைது செய்கிறேன்...
அதற்கு முன் உங்கள் அனே-வருக்கும் பரிசு ஒன்று தரலாம் என்று நினேக்கிறேன்!
ஹா...டைனமைட்!
பரவாயில்லேயே! சட்டென்று கண்டுபிடித்து விட்டாயே!


எங்கே... பிடி— பார்க்கலாம்!
ஆஆ...!
உளவுப்படையில் நீ இப்போது இல்லாததால் பாரிஸ்வரை உனக்கு தொடர்ந்து உதவி கிடைக்குமா என்பது
பிரஞ்ச் கடற்கரை எல்லையிலிருந்து ஒருமணி நேர பயணத்திற்குப் பின்...
தனியாகவே செல்ல நான் தீர்மானித்தது ஒரு பைத்தியக்காரத்தனமான முடிவாக இருக்கக்கூடும்... என்னை அலைக்கழிக்கும் பேயை விரட்ட அந்த கிராதகனை நான் கொன்றாக வேண்டும்!
இரவு மணி 2 பிரான்ஸின் கிராமிய சாலை ஒன்றில் இராணுவ கார் ஒன்று விரைந்து வந்துகொண்டிருந்தது...
மடையன்...யாரோ வழியை மறித்துக் கொண்டு நிற்கிறான் பார், அவனுக்கு என்ன வேண்டுமென்று கேள் டிரைவர்!
கர்னல் பாரிஸில் நடக்கவிருக்கும் முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ள சென்று கொண்டிருக்கிறார்-குறுக்கே வந்து தொல்லை கொடுக்கிறாயே...யார்?
கார் பாரிஸ் செல்கிறதா! நல்லதாகப் போயிற்று— எனக்கும் அவசரமாக அங்கே செல்ல வேண்டும்!


அத்தோடு கர்னலுக்கு உடனடியாக வேறொரு டிரைவரும் தேவைப்படப் போகிறது!
ஆ... ஐயோ!
அயோக்கிய... ராஸ்கல்!
ஊஹூம்...துப்பாக்கியை எடுக்காதே!
அதையடுத்து—
நான் சொல்கிறபடி செய்... இல்லையேல் உன் எலும்புகள் நொறுங்கிப் போகும்!
ஆ...என் கை - ச...சரி. நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்!
நாம் இப்போது ஒரு சோதனை சாவடியை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்... நான் ஒரு சாதாரண டிரைவர்...மிக அவசரமாக கிளம்பியதால் தேவையான அடையாள அட்டைகளை எடுத்துக் கொண்டு வரவில்லை - புரிகிறதல்லவா!
நீயே சொல்லிக் கொள் அவர்களிடம் தேசத் துரோகியாக மாற விரும்பவில்லை நான்!
நாசமாய்ப் போக குறி தப்பிவிட்டதே! இடது கைக்கு பயிற்சி போதாது!
தடை மீது மோதி தகர்த்துக் கொண்டு போகிறான்...டயரை குறிவைத்து சுடு - நான் உள்ளே போய் உதவி கோரி ரேடியோவில் செய்தியனுப்புகிறேன்!


ஆனால்—
அட... திரும்பி வருகிறானே!
உங்களுக்கு டாடா... சொல்ல மறந்து விட்டது. அதான்...
ஊய்ய்...ய்!
சோதனை சாவடியின் மீது போய் மோதினான் நார்மன்.
...ஓ ரேடியோவில் செய்தியனுப்ப முயற்சிக்கிறாயா?



இந்தா உன் பங்குக்கு இரண்டு தோட்டாக்கள்!
ம்... இனி இந்த ரேடியோ கருவியில் நானொரு செய்தி அனுப்பப் போகிறேன்...
கர்னல் லூதலுக்கு... உன் கணக்கைத் தீர்க்க வந்து கொண்டிருக்கிறேன் வெறிநாயே!
நீ என் கனவில் வரும்போதெல்லாம் எனக்கு எப்படி வியர்த்துக் கொட்டுகிறதோ அதேபோல் என்னைக் கண்டதும் உனக்கு வியர்த்துக் கொட்ட வேண்டும்!
உன்னை நான் நெருங்குவதை தடுத்து நிறுத்த எந்த சக்தியாலும் முடியாது!
அத்தியாயம்—3
கொலை முயற்சி!
இரவு வேளை—
அடையாளம் தெரியாதவாறு முகத் திரையிட்டுக்கொண்ட நார்மன் இருளினூடே புறப்பட்டான்...
ஜெர்மானிய ரோந்துப் படையினர்... நின்று இவர்களோடு மோதிப் பார்க்க அவகாசம் கிடையாது.


மெள்ள நழுவி விட வேண்டும்!


இதற்கிடையே - லூதலின் இராணுவ அலுவலகத்தில்...
இங்கே.. இங்கே...இங்கே வரிசையாக இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப் பட்டிருக்கிறது...பாரிஸை நோக்கி வரும் வழியில் அடுத்தடுத்து இந்த தாக்குதலை நடத்திய நபர் நார்மன் என்று தெரிய வந்துள்ளது!
PARIS
நார்மனா? அவன் இன்னும் உயிரோடு தானிருக்கிறானா!


அவன் என்னைப் பழிவாங்கத்தான் வந்து கொண்டிருக்கிறான் என்பது நிச்சயம்...பாதுகாப்பு அமைப்பை பலப்படுத்துங்கள்- -நகர் முழுவதும் வலைவீசி அவனை கண்டுபிடியுங்கள்!


ஆனால் அப்போது லூதல் எண்ணிக் கொண்டிருந்ததை விட மிக அருகிலேயேதானிருந்தான் நார்மன்...
அதோ...லூதலின் இராணுவ அலுவலகம்! வெறியன் அங்கேதான் இருப்பான்!
GEHEME STAATSPOLIZE
லூதல்...இனியும் நீ என் பிரமையில் வந்து என்னை ஆட்டிப்படைக்க முடியாது. இன்றிரவு நீ சாகப் போகிறாய்...



அந்த இராணுவ அலுவலகத்திற்கு பக்கவாட்டிலிருந்த கட்டிடத்தை நோக்கி நழுவினான் நார்மன்...
பூட்டு தொங்குகிறது! என்னுடைய இரும்புக்கைக்கு இது ஒரு பிரச்னையே அல்ல!
இராணுவ அலுவலக கட்டிட கூரைமீது கண்காணிப்பாளன் ஒருவன் துப்பாக்கியோடு தயாராக இருக்கிறான்...சைலன்ஸர் பொருத்திய என் துப்பாக்கி வேலையை கச்சிதமாக முடித்துவிடும்—



...கொக்கிமுனை கொண்ட கயிற்றை வீசி எறிந்து இராணுவ கட்டிடத்திற்கு பாலம் ஏற்படுத்திக் கொண்டான் நார்மன்.
இருளில் யாரும் என்னைக் கண்டு கொள்ள முடியாது!


ஆனால் துரதிர்ஷ்டவசமாக கீழே இருந்த காவலாளிகள் கவனித்து விட்டார்கள்!
அதோ ... யாரோ மேலே இருக்கிறார்கள்-சுடு...


ஆனால் உறுதியான உலோகக்
கை பிடியை விட்டு
விடவில்லை!
படார்!!
ஹே...என்ன இது-
யார் நீ!
டுமீல்!
மூடு வாயை!


கீழேயிருந்து விளக்கொளி
பாய்ச்சுவோரை முதலில்
கவனிக்க வேண்டும்!


டைனமைட்
குச்சிகள்
நம்பகமானவை!
ஆவ்...!
டமால்!


உள் வராந்தாவில் நார்மன் ஓடிய போது—
ஜெர்மானிய
வீரர்கள்...


டைனமைட் குச்சிகள் இதோ...
ஆவ்...
லூதலின் அலுவல் அறை இந்தப் பக்கம்தானிருக்கிறது...லூதலை நான் கொன்றாக வேண்டும்-
நார்மன்...!
கடைசியாக நீ ஏதாவது சொல்லிக் கொள்ள விரும்பினால் அதை இப்போதே சொல்லிக் கொண்டுவிடு... லூதல்!
நீ என்னை கொல்ல மாட்டாய் நார்மன்...நீ மற்றவர்களை கொல்லலாம்...ஆனால் என்னைக் கொல்ல மாட்டாய்!
நீ என்னை வெறுக்கிறாய்... ஆனால் உன் அடி மனத்தில் எனக்கு அஞ்சி நடுங்குகிறாய் நீ இன்னுமும் உன்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறேன் நான் என்பது நிஜம்!



நார்மனின் மனத்திரையில் லூதலின் கொடிய முகம் பூதாகரமாக உருவெடுத்தது...
அவஸ்தைப்படு நார்மன்... வலி என்ருல் என்னவென்று அனுபவித்துப் பார்...
என் கண்களுக்குள்ளே பார்த்து அஞ்சி நடுங்கு நார்மன்... அச்சப்படு...
வேண்டாம்—போதும் என்னை விட்டுவிடு!
ஆ...துப்பாக்கியின் விசையை என்னல் இழுக்க முடியவில்லையே!
அந்த துப்பாக்கியை இப்படி என்னிடம் கொடு நார்மன்...
ம்...இதுதான் நல்ல பிள்ளைக்கு அழகு... அன்றைக்கு விட்ட இடத்திலிருந்து மிச்சத்தை தொடர உடனே ஏற்பாடு செய்கிறேன்...
இரண்டு இராணுவ அதிகாரிகள் வரவழைக்கப்பட்டனர்...
நார்மன் என் ஆதிக்கத்தில் இருக்கிருன். வாய்ப்புக் கிடைத்தும் என்னை அவனல் கொல்ல முடியவில்லை!
சரியான முட்டாள் பயல்... இங்கே திரும்பவும் வந்ததற்கு வகையாக பாடம் கற்றுக் கொள்ளப் போகிருன்... இழுத்துக் கொண்டு போங்கள் அவனை!



இவனை உடனே கொன்று
விடுவது உசிதம்! பலவீன
மான நிலையிலும் இவன்
ஆபத்தானவன்!



பின்னர்—
தனிமை சிறையில் அடைக்
கப்படும் எவனும் மனஉறுதி
இழந்து விடுவானென்பது உறுதி!
மனப்பிரமை காரணமாக பயங்கர
கற்பனை உலகில் அவன் சஞ்சரிக்
கட்டும்...
அவனை நம்மிஷ்டப்படி
ஆட்டிப் படைக்கலாம்!


கதவிலிருந்த சிறு துவாரத்தின் வழியாக நார்மனின் நிலையை ஆராய்ந்து கொண்டிருந்த நபர் வேறு யாருமல்ல ஹூதல்தான்!
இன்றிரவு கடைசி அத்தியாயத்தை எழுதிவிட வேண்டியதுதான்...
நார்மன் கடுத்தமான ஆசாமிதான்... அவன் என் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டபோதிலும் இன்னமும் மன உறுதியை இழக்கவில்லை...
என் கண்களுக்குள்ளே பார் நார்மன்...நான்தான் உன் மாஸ்டர் என்பதை அறிந்து கொள்—
மறுபடியும் மறுபடியும் ரணம் வசப்பட்டு அலறித் துடித்தான் நார்மன்.
போ...போய்விடு பிசாசே— என்னை சித்திரவதை செய்யாதே!



லூதல் என்னை கைது செய்து கொடுமைப் படுத்திஞன்...தப்பிச் சென்ற நான் பழிவாங்க திரும்பிவந்தேன்... ஆஞல் வாய்ப்புக் கிடைத்தும் கடைசி நேரத்தில் துப்பாக்கி விசையை இழுக்க இயலாமல் போய்விட்டது-அது ஏன்...? ஏன்?


அடேய் நார்மன்... இன்னமும் சுயகட்டுப்பாடு இழந்துவிட வில்லையடா நீ...சிந்தி...நன்ருக சிந்துத்துப்பார்—ஏன் அந்த பிழை நேரிட்டது?


பார்...என் கண்களுக்குள்ளே ஊடுருவிப் பார்...நான்தான் உன் மாஸ்டர் என்பதை புரிந்து கொள்வாய்!
ஹூதலின் கண்கள்தான் காரணம் என் மீது ஹிப்னட்டிஸ முறையில் ஆதிக்கம் செலுத்திக் கொண்-டிருக்கிருன்!


இரும்புக்கையை பயன் படுத்தி, தன்னை சுவரோடு பிணைத்திருந்த சங்கிலியை ஆங்காரத்தோடு இழுத்தான் நார்மன்—
ஆம்...அவனுடைய விழிகளை தவிர்த்துக் கொண்டு விட்டால், நான் அவனை அழித்து விட முடியும்!



விரல்களிலிருந்த சிறு மோட்டார் அமைப்பு ஓசையின்றி இயங்கியது... இறுதியில்—


நார்மன் தன்னுடைய இடது கையையும் விடுவித்துக் கொண்டு விட்டான். அறை-யின் சுவரில் புதிதாக சிமெண்ட் பூசப்பட்டிருப்பதை கவனித்தான்...சில மாதங்களுக்கு முன் அவன் அடைக்கப்பட்டிருந்த அதே அறைதான் இது!
என் கணிப்பு சரியாக இருக்குமேயானால் சுவ-ருக்கு மறுபக்கம் இதே இடத்தில்...
...இந்த அறைக்கு உரிய மின் இணைப்பு இருக்கிறது! லூதலே சந்திக்க இப்போது நான் தயார்!


அன்றிரவு லூதல் அறையினுள் வந்தபோது நார்மன் தான் இன்னமும் சுவரோடு பிணைக்கப்பட்டிருப்பது போலவே நின்று கொண்டிருந்தான்...
வாயை மூடு! உன் இரும்புக் கையை இப்போது என் விஞ்ஞானிகள் பரிசீலனை செய்து பார்க்கப் போகிறார்கள்!
வேண்டாம்... என்னை வதைக்காதே லூதல்! விட்டுவிடு... ப்ளீஸ்!
நடக்காது!
ஆ...ஆ!
அவிழ்த்துக் கொண்டு விட்டான்!
டேய்...உங்களை -
அஹ்...!


ஏன் இந்த துஷ்டத்தனம் நார்மன்—
பார்...நேராக உற்றுப்பார்-
என் கண்களுக்குள்ளே!
இல்லை...நான் அந்தக் கண்களை தவிர்த்துக் கொண்டு விடவேண்டும்!
மின் இணைப்பு துண்டிக்கப் பட்டது...இரும்புக் கை மின் பாதிப்பு ஏற்படாத வகையில் அமைக்கப் பட்டிருந்தது.
முதலில் அந்த மின் இணைப்பை துண்டித்தாக வேண்டும்...
விளக்குகள் அணைந்து விட்டனவே!
நான் உன் கண்களை பார்க்கமுடியாது! என்னை நீ ஹிப்னடிஸத்தால் வயப் படுத்த சாத்தியமில்லை வெறி நாயே!


ஆ...வ்!
துப்பாக்கியை தொடாதே!
நீ எனக்கு அளித்த பரிசான இந்த இரும்புக் கையே உனக்கு இப்போது எமனாகப் போகிறதடா...முட்டாள்!
வேண்டாம்...என்னை விட்டுவிடு நார்மன்!
கருணை...கொஞ்சம் கருணை காட்டு!



கருணைதானே! காட்டுகிறேன்! நீ என்னிடம் காட்டிய அதே கருணையைக் காட்டுகிறேன்!
அப்போது—
ஐயோ...கர்னலை அவன் கொன்று விட்டான்!
கூண்டோடு கைலாசம் போங்களடா...பன்றிப் பயல்களா!
ஆஆஆ...!







இரும்புக் கை நார்மனின் அடுத்த சாகஸம்
பக்கம் 40-ல் உள்ளது!

# விச்சு & கிச்சு


ஹா! ஹா! இப்படிப் பட்ட சர்வீஸ்களை யெல்லாம் ஐயா என்ன செய்வார் தெரியுமாவிச்சு ?
மடேர் ! என்று தான் விளாசுவார் !
ஹேய், பந்து வெளியே போய் விட்டது கிச்சு !
சரி, சரி போய் எடுத்து வா !
ஊம் இன்னுமா எடுக்க வில்லே ?
பந்தைக் காணோம் கிச்சு !


இப்பொழுது இந்த சூப்பர்—டூப்பர் சர்வீஸைப் பார் விச்சு இதைப்போல் ஒரு சர்வீஸை நீ இதுவரை பார்த் திருக்க மாட்டாய் !
ஹேய் ... கொஞ்சம் பொறு கிச்சு!
ஹா!ஹா!ஹா! நீ சொன்னது உண்மை தான் கிச்சு! இதைப் போல் ஒரு சர்வீ ஸை நானபார்த் ததே இல்லே தான்!
முற்றும்.


போச்சு!


கதை-2
போர்க் கால இலண்டன் மாநகரத்தின் வீதிகளில் ஒரு நாள் இரவு...
ஹே...யாரது? ஆபத்தான இந்த பகுதியில் இப்படி ராஜநடை போட்டுக் கொண்டு போக உனக்கென்ன பைத்தியமா...போய் எங்காவது பதுங்கிக் கொள்— உடனடியாக!
ஜெர்மானியர்கள் வெடிகுண்டுகளை வீசி மக்களைப் பலிகொண்டு வருகிறார்கள்... இந்த அட்டகாசத்திற்கெல்லாம் அவர்களைப் பதில் சொல்ல வைக்க வேண்டிய கூட்டத்தினரில் நானும் ஒருவனாக இருக்கப் போவதில்லை—ஆம்... நான் மறுபடியும் பிரிட்டிஷ் உளவுப் படையில் ஒருபோதும் பணியாற்றப் போவதில்லை!
பணி!
அத்தியாயம்—1



சரியாகச் சொன்னாய்—நான் மட்டுமல்ல...இந்த உலகம் மொத்தமும் பைத்தியம் பிடித்து அலைகிறது!
சற்றுத்தள்ளி திடீரென்று நாலைந்து முரடர்கள் மறைவிடத்திலிருந்து வெளி வந்தனர்...
பத்திரமாக வீடுபோய் சேர வேண்டுமானால் பையிலிருப்பதை வெளியே எடு...
கொள்ளைக் கூட்டம்... மரணமும் அழிவும் ஆதிக்கம் செலுத்துமிடத்தில் சுயலாபத்துக்கு வழிமறிக்கும் பிணம் தின்னிகள்!
இன்றைக்கு உங்களுக்கு நாள் சரியில்லை போலும்...கோபமும் வெறுப்புமாக உள்ளுக்குள் கொந்தளித்துப் போயிருக்கிற நான்...
ஹே...அங்கே பார்—அவனுடைய வலது கை பளபளக்கிறதை!



...அதை யாரிடம் காட்டுவது என்று தெரியாமல்தான் அலைந்து கொண்டிருந்தேன்... நீங்கள் வந்து சேர்ந்திருக்கிறீர்கள்!
முஷ்!
அஹ்...!
சற்று தள்ளியிருந்து இருவர் அதை கவனித்துக் கொண்டிருந்தனர்...
நார்மன் தான்...
தனி நபராக இருந்து கொண்டு நாலைந்து பேரை சமாளிக்க முடிகிறதே அவனால்!
ஹலோ ஹலோ... லீவர் பையா! சௌக்கியமா?
ஏறு வண்டியில்—மேஜர் பிரைட் உன்னை சந்திக்க விரும்புகிறார்!
மேஜர் பிரைட்? ஹூம்... அந்தக் குரங்கனை பார்த்து நாளாயிற்று!
அதையடுத்து—மேஜர் பிரைட்டின் அலுவலகத்தில்...
மறுபடியும் உன்னை உளவுப் படையில் சேர்த்துக் கொள்ள தீர்மானித்திருக்கிறேன் நார்மன்... ஒரு முக்கியமான பணிக்கு நீ தேவைப் படுகிறாய்!
நானா..? அடி சக்கை!


உங்கள் உதவி எனக்கு தேவைப் பட்டபோது என்ன செய்தீர்கள்? கிராதகன் ஒருவனால் என் கை சிதைக்கப் பட்டு வாழ்நாள் முழுவதும் இப்படி இரும்புக் கையோடு அலைய வேண்டிய நிலை நேரிட்டபோது...
...இவன் ஒன்றுக்கும் பயன்பட மாட்டான் என்று உளவுப் படையிலிருந்து விலக்கினீர்கள் இப்போது-? நானென்றும் அழிந்துபோய் விடவில்லை என்றறிந்து கொண்டதும் திரும்ப அழைக்கிறீர்கள்... இல்லையா?
ஏய்...மேஜரின் மீது கை வைக்காதே!
அஹ்...!
...பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது குறுக்கே வராதேடா சுண்டைக்காய!
உங்களுடைய முக்கியமான பணியை மேற்கொள்ள வேறு எவனாவது சோணகிரி அகப்படுவான்--- நான் மீண்டும் உங்களிடம் பணிபுரிய தயாரில்லை! புரிகிறதா?
ஆ... எ...என்
இப்படி ஒரேடியாக உதறி எறிந்துவிட்டு நீ ஓடிவிட முடியாது நார்மன்... நாஜிகளின் மீது அளவற்ற வெறுப்புக் கொண்டுள்ள உனக்கு சாதாரண வாழ்க்கை சரிப்படாது... உனக்கு ஏற்ற இடம் இதுதான் என்று விரைவிலேயே புரிந்து கொண்டு திரும்பி வரத்தான் போகிறாய்!


பிரைட்டின் கணிப்பு தவறு...என்னை மனமார நேசிக்கும் பெண்ணொருத்தி இருக்கிறுள்— அவளை மணந்து கொண்டு எங்காவது கிராமப்புறத்தில் போய் போர், அடிதடி முதலியவைகளை அடியோடு மறந்து விட்டு அமைதியாக வாழப்போகிறேன்!
ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாக நகரின் குறுக்கே நடந்து போய்க் கொண்டிருந்த நார்மன் ஒரு உணவு விடுதியின் முன் வந்து நின்றுன்...
டேய் தடிப்பசங்களா-ரோஸலினேடு நான் கொஞ்சம் பேச வேண்டும்... தொலைந்து போங்கள்!
AUSTRALIA
அப்படியெல்லாம் உன இஷ்டத்துக்கு நடக்காது இங்கே...


இடத்தைக் காலி பண்ணச் சொன்னது காதில் விழவில்லையா?
சரியான கிறுக்கனாக இருப்பான் போலிருக்கிறது! வா!


...நீங்கள் செய்தது சரியில்லை நார்மன்—கொஞ்சம் பொறுமையாக நடந்து கொண்டிருக்கலாம் நீங்கள்!
அது போகட்டும்...உன் துணிமணிகளை மூட்டை கட்டிக் கொண்டு புறப்படு என்னோடு. கிராமப் புறத்துக்கு சென்று வாழத் தீர்மானித்து விட்டேன்!


இல்லே நார்மன்...நான் நேசித்த பழைய நார்மன் அல்ல நீங்கள்... நாஜிகள் உங்களை துன்புறுத்திய பின் அடியோடு மாறிப்போய் விட்டீர்கள்... உங்களை...நினைக்கும் போதே எனக்கு அடிவயிற்றில் கிலி பிறக்கிறது!
...இதுதான் உன் கருத்து என்றால் நான் உன்னை வற்புறுத்தப்போவதில்லை ரோஸலின், இனி இங்கே வந்து உன்னை தொந்தரவு செய்யமாட்டேன்!
...நானும் அதைத்தான் விரும்புகிறேன் நார்மன்- என்னை மன்னித்து விடுங்கள்!
என்னைக் கண்டு ரோஸலின் கூட பயப் படுகிறாள்— அந்த அளவுக்கு மிருகத் தனம் என்னுள் புகுந்து கொண்டு விட்டதா என்ன?


கார் ஒன்று அருகே வந்து நின்றது.
என்ன நார்மன்... ஆத்திரம் தணியவில்லையா இன்னும்?
பிரைட் கூறியதுதான் சரியாகி விட்டது! என்னை உயிருக்குயிராக நேசித்த பெண்ணே விலகிச் செல்கிறாள் என்றால் நான் வேறு எங்கேதான் போவது? என் வெறுப்பு, கோபம் அனைத்துக்கும் வெளிப்பாடு வேண்டுமானால் உளவுத் துறைதான் ஏற்ற இடமாக இருக்குமோ?
ஆல்ரைட் பிரைட்! நீ வென்று விட்டாய்... உங்களோடு வர தீர்மானித்து விட்டேன்!
நல்லது நார்மன்! உனக்கான பணி தயாராக உள்ளது... மிகவும் ஆபத்தான பணி! உன் உயிருக்கு உத்தரவாதம் கிடையாது!
பிரச்னை அனைத்துக்கும் அதுவே சரியான பதிலாக இருக்கக் கூடும்!


மேஜர் பிராட்டின் அலுவலகத்தில்—
அத்தியாயம்—2
என் தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருக்கும் படத்தில் இருப்பவன்-ஜெர்மன் விமானப்படை தளபதி கோரிங் குண்டு வீச்சினால் நமக்கு ஏற்பட்டுவரும் சேதம் வெளியே சொல்லிக் கொள்ள முடியாத அளவுக்கும் மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறது...ஜெர்மன் விமானப் படையை தடுமாறச் செய்ய வேண்டுமானால் இவனை கொல்வது ஒன்றுதான் வழி! அந்தப் பணியை செய்துமுடிக்க உன்னை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்!



தனியொரு நபராக இதை நீ சாதிக்க இயலாது...ஜெர்மனியில் உனக்கு பக்கபலமாக இருக்க லீவர் துணை வருவான்.
நான் எப்போதுமே தனியாகவே செயலாற்றி வந்திருக்கிறேன்—லீவர் போன்ற ஓட்டை வாயர்களோடு சேர்ந்து பணியாற்ற எனக்குப் பிடிக்காது!
இம்முறை லீவர் உன்னோடு வரத்தான் போகிறான்—இதுவே என் உத்தரவு...
நார்மன்-என் ஆணை
சரி... வேறென்ன?
போர்க் கருவி பொறுப்பதிகாரி ஜென்கின் வரவழைக்கப் பட்டார்—
இதோ - விஷவாயு உமிழும் பேனா அமைப்பு துப்பாக்கி...ஒரு இராணுவம் மொத்தத்தையும் அழிக்க போதுமான சயனைடை உள்ளடக்கிய மோதிரம், தங்க காசுகளும் பலநாட்டு கரன்சிகளும் அடங்கிய இடைக் கச்சை—
நிறுத்துங்கள் . என்
இந்த உலோகக்
சாதிக்க முடியாத
இவை சாதித்துவிடப் போவதில்லை...


பணம் அடங்கிய இந்த பெல்ட்டை மட்டும் எடுத்துக் கொள்கிறேன்... வேறு எதுவும் தேவையில்லை...
என் புது சகாவோடு தனி-யாக ஓரிரு விஷயங்கள் பேச விரும்புகிறேன்.
வெளியே...வராந்தாவில்—
என்ன சொல்ல விரும்புகிறாய்... நார்மன்?
அதிகமாக ஒன்றுமில்லை...
ஆஆ...!
கும்!


உன்னை எதற்காக பிரைட் என்னோடு அனுப்புகிறான் என்று தெரியவில்லை... உன்னை எனக்கு கொஞ்சமும் பிடிக்க வில்லை! அங்கே ஏதாவது விஷமம் செய்தாயோ முதல் சந்தர்ப்பத்திலேயே மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல் நசுக்கி விடுவேன் என்பது ஞாபகத்தில் இருக்கட்டும் பையா!
உனக்கு பைத்தியம்தான் பிடித்திருக்கிறது நார்மன்!
இரண்டு தினங்களுக்குப்பின் ஜெர்மானிய நகரான எஸ்ஸென்னுக்கு அருகாமையிலிருந்த காட்டுப் பகுதியில் பாராசூட் மூலம் தரையிறங்கினர் நார்மனும், லீவரும்—
மோசமான அறிகுறி! மாற்று சந்திப்பு இலக்கான பழைய பண்ணை வீட்டை நோக்கிச் செல்வோம்!
ஜெர்மானியர்களை எதிர்க்கும் உள்ளூர் கம்யூனிஸ்ட் தோழர்கள் நம்மை இங்கே சந்திப்பதாக ஏற்பாடாகியிருந்தது—ஆனால்...யாரையும் காணோமே!
கதவில் தொடர்ந்து மூன்று முறை தட்டு...பிறகு இரண்டு முறை தட்டு.




வாருங்கள் காம்ரேட்ஸ்! உங்களைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந் தோம்!
அப்பாடா! இப்பொழுதுதான் நிம்மதி! ஏனோ என் தோழன் அரண்டு போய் இருக்கிறான்!
காரணமில்லாமல் இல்லை!
நார்மன்...என்ன இது— ஏன் அவனை சுட்டாய்?
எந்த கம்யூனிஸ்ட்டின் நெற்றியில் போர்க்காய வடுவை நீ பார்த் திருக்கிறாய்? இவன் ஒரு நாஜி— நயவஞ்சக நாடகமாடுகிறவன் இவன்!


பண்ணை வீட்டினுள் புயலென
பாய்ந்தான் நார்மன்...
கொலைப் படையைச் சேர்ந்த மற்றவர்கள்... இதோ!
ஆஆ...
டுமீல்!



ஆஆ...!
யாரும் எழக் கூடாது...
பிரிட்டிஷ்காரப் பன்றி!


ஸாரி...பாப்பா—இல்லை—பையா...! விருந்துண்ண வரவில்லை நாங்கள்!
ணங்!
இவனுடைய கை இரும்பிலா...ஆஆ!
உன் பாணி ரொம்ப முரட்டுத் தனமானது நார்மன்...
இந்த வேலையில் வேறு வழி-யில்லை லீவர்...நாஜிகள் வந்து சேருவதற்குள் வா இங்கிருந்து போய்விடலாம்!
பின்னர், அவர்களிருவரும் எஸ்ஸென் நகரினுள் பதுங்கி பதுங்கி செல்லலாயினர்...
ஊரடங்கு உத்தரவு அமலிலிருக்கிறது...இங்கே ஏகப்பட்ட நாஜிகளின் நடமாட்டம் தென்படுகிறது...விடியும் வரை நாம் எங்காவது ஒளிந்து கொண்டிருப்பதுதான் புத்திசாலித் தனம்...


அமைதியாகக் கிடந்த வேறொரு தெருவில் ஒரு வீட்டின் கதவை தட்டினான் நார்மன்...
யா...யார்... நீங்கள்?
விலகி வழி விடு... தாத்தா!
வெறிபிடித்த நாய் போலிருக்கிறான்—இவன் சொல்கிறபடி செய்வதைத் தவிர வேறு வழியில்லை
சரியாகச் சொன்னீர் தாத்தா! லீவர்...எல்லோரையும் கட்டிப் போடு.
மூவரையும் கட்டிப்போட்டு வாயில் துணியையும் திணித்த பின் நார்மனும், லீவரும் விடிவதற்காக காத்துக் கொண்டிருந்தனர்.
ஆரம்பமே குழப்பமாகிவிட்டது.. போகப் போக இன்னும் மோசமாகத்தானிருக்குமென்று தோன்றுகிறது...அத்தோடு, பணி முடிந்த பின் நம்மில் யாரோ ஒருவர் மட்டும்தான் ஊர் திரும்பப் போகிறோம் என்பதாகப்படுகிறது எனக்கு.
ஆமாம் நார்மன் எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது!
55



மேஜர் பிரைட்டிடமிருந்து விடைபெறும் போது நடைபெற்ற உரையாடலை லீவர் நினைவு கூர்ந்தான்...
நார்மன் மாதிரி ஒரு முரடனுக்குத் தான் கொல்ல வேண்டுமென்ற வெறியோடு கோயரிங்கை நெருங்கும் மனோதிடம் இருக்கும்...ஆனால் அவன் அனுபவித்த சித்திரவதை காரணமாக அவனுடைய செயல்திறனில் பூரண நம்பிக்கை வைக்க முடியவில்லை...அதனால்தான் இந்த ஏற்பாடு...
ஜென்கின் போர்க் கருவிகளை கொடுக்கும்போது இந்த இடைக் கச்சையை மட்டும்தான் நார்மன் எடுத்துக் கொள்வான் என்பது எனக்குத் தெரியும்! அவனுடைய சுபாவம் அப்படி!





அழுத்தமாக உள்ளமைக்கப்பட்ட பிளாஸ்டிக் வெடிகளாலானது இந்த பெல்ட்...நீ அணிந்து கொள்ளவிருக்கும் இந்த கைக்கடிகாரத்திலுள்ள பட்டனை இயக்கி 500 மீட்டர் தொலைவிலிருந்து கொண்டு அந்த வெடிகளை தூண்டி வெடிக்கச் செய்ய முடியும்...அப்போது நிகழும் விபத்தில் நார்மனைச் சுற்றி 50 மீட்டர் எல்லைக்குள்ளிருக்கும் அனைவரும் செத்து மடிவது உறுதி!
நார்மனின் கதி...?
நாட்டு நலனுக்காக ஒரு சிலரை நாம் பலி கொடுக்கத்தான் வேண்டும்!


மறுநாள் விடிகாலை இருவரும் மறைவிடத்திலிருந்து வெளியேறி நடந்தனர்...நார்மன் விசித்திரமான-தொரு திட்டம் தயாரித்திருந்தான். அதன்படி நகருக்கு சற்று ஒதுக்குப்புறமாக இருந்த மருத்துவமனையின் சவக்கிடங்குக்கு முன்னால் வந்து சேர்ந்தனர்...
யார்...,நீ என்ன வேண்டும் உனக்கு? சவக்கிடங்கு மூடப்பட்டிருக்கிறது...
அப்படியானால் திற...
ஆ... இரும்புக்கை! மூச்சு முட்டுகிறது...ஆவ்!


கதவு திறக்கப் பட்டது...
உ...ப்ப்!
நிதானம் தேவை நார்மன்...
அப்படியில்லை லீவர்...காலை ஷிப்ட் ஆட்கள் வருமுன் நாம் வேலையை முடித்துக் கொண்டுவிட வேண்டும்.
சவக்கிடங்கின் பிரதான அறையில்—
வரிசை வரிசையாக சவப்பெட்டிகள்...
போரில் மரணமடைந்த வீரர்களை சொந்த ஊருக்கு அனுப்ப செய்யப் பட்டிருக்கும் ஏற்பாடு...மேலே ஒட்டப்பட்டிருக்கும் காகிதங்களை பார்த்து நமக்கு தேவைப்படும் பெட்டியை இனம் கண்டறிய வேண்டும்!
Schultz, Erich—Hauptman Karlstrasse, Ober Ammergau.
ஓபர் அம்மர்கா— இதோ...இந்தப் பெட்டிகள்தான்— மூடிகளை அகற்று லீவர்.
உள்ளே இருந்த பிணங்களை குளிர்சாதன அறையினுள் கொண்டுபோய் போட்டனர்...
கோயரிங்கை கொல்வதற்காக நாம் அனுப்பப் பட்டிருக்கிறோமேயன்றி சவப்பெட்டிகளை திருடுவதற்காக அல்ல நார்மன்...
ஒரு முக்கியமான ஆலோசனை நடத்த கோயரிங் இன்று ஓபர் அம்மர்கா வரப்போகிறான்... பாதுகாப்பு ஏற்பாடுகளை முறியடித்து அந்த நகரினுள் நாம் பிரவேசிக்க இந்த சவப்பெட்டிகள்தான் நமக்கு உதவப் போகின்றன.


சரியாகப் படவில்லை நார்மன்...
விவாதித்துக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை...இப்படிக் கொடு உன்னுடைய மயக்க வாயு பீச்சும் பேனாவை!
நீ...நீ...என்ன செய்கிறாய்?
மயங்கி விழுந்த லீவரை ஒரு சவப் பெட்டிக்குள் தூக்கிப் போட்டான் நார்மன்...
இனி அடுத்த சவப் பெட்டிக்குள் நான் புகுந்து கொண்டுவிட வேண்டும். அவ்வளவுதான்!
ஒரு மணி நேரத்திற்குப் பின்—
நிட்ஜை எங்கே கண்ணிலேயே படக்காணோம்?
சீக்கிரமாக கிளம்பி போய்விட்டான் போலிருக்கிறது - சீக்கிரம் பெட்டிகளை கொண்டு செல்லுங்கள்...ஓபர் அம்மர்கா செல்லும் வண்டி கிளம்புமுன் கொண்டு சேர்க்க வேண்டும்.
கிராமிய பகுதியினூடே விரைந்த இரயில் பிற்பகலில் ஓபர் அம்மர்கா போய்ச் சேர்ந்தது...
கவனமாக இறக்க வேண்டும்... தெரிந்ததா!


விந்தை நிகழ்ச்சியாக, அடுத்த பிளாட்பாரத்தில் வந்து நின்றது வேறொரு எக்ஸ்பிரஸ்...அதிலிருந்து இறங்கி வந்தார் ஜெர்மானிய விமானப்படை தளபதி—கோயரிங்!
தளபதி கோயரிங் வாழ்க!
போரில் மாண்ட உள்ளூர் இளைஞர்களை சுமந்து வந்திருக்கிறது அந்த இரயில்... அங்கே போய் நான் சில வார்த்தைகள் பேசினால் அது என்னைப்பற்றி மக்கள் உயர்வாக எண்ண வைக்கும்!


சவப்பெட்டிகளை நோக்கி நடந்தார் கோயரிங்...
தாய் நாட்டுக்காக உயிர்விட்ட இந்த தியாகிகளுக்கு விமான படைத் தளபதி என்ற முறையில்...


நி...நிஜம்...தாஞ? நானிருக்கும் சவப்பெட்டியின் மூடி தட்டியபடி பேசிக்கொண் டிருப்பவன் கோயரிங்கா?
நான் இப்போது மேற்கொள்ளப் போகும் முயற்சி தற்கொலேக்கு ஒப்பானது—ஆனல் ஏற்றுக் கொண்ட பணியை முடிக்க இதை விட சிறப்பானதொரு வாய்ப்பு பின்னர் கிட்டப் போவதில்லே!
ஆனல்...நார்மன் துப்பாக்கி விசையை இழுத்த கணத்தில்.
பூங்கொத்து! நன்றி... பாப்பா!
டூமீல்!
ஆஆஆ...
பிணத்தின் கையில் துப்பாக்கி! அதெப்படி?



எங்கே கோயரிங்—
தப்பி விட்டானு?
ஆ ஆ...!
வாருங்கள்—ஓடிப்
போய்விடலாம்!
கொலேகாரனே சுட்டுத்
தள்ளுங்கள்—உடனே!
தப்பிவிட்டாயா! விரை-
விலேயே என் கையால் நீ
சாகப் போகிருய்!


உலோக கையுறை அணிந்திருக்கிருன்—தோட்டாக்களை தடுத்துக்கொள்ள அது உதவுகிறது அவனுக்கு!
ஊஹூம்...இங்கே ரொம்ப நேரம் தாக்குப்பிடிக்க முடியாது—
பாய்ந்தோடினுன் நார்மன்...
முதலில் இங்கிருந்து ஓடிப்போய்விட வேண்டும்!
அஹ...!


பிடியுங்கள் இவனை!
நடக்காது என்னிடம்..,
ஆ·அ...ம்...மா!
கும்!


தெருவுக்கு வந்தாயிற்று... இனித் தப்பி விடலாம்!
ஆ...!
நடமாட்டமில்லாத பூந்தோட்ட மொன்றின் காவல் விடுதியினுள் போய் பதுங்கிக் கொண்டான் நார்மன்...
தோட்டாக்கள் என் உலோகக் கையில் மேடு பள்ளங்களை ஏற்படுத்தி விட்டன...
அதென்ன சப்தம்...நான் தனியாகவே செயலாற்றி பழக்கப் பட்டவனுதலால் இத்தனை நேரமும் லீவரை அடியோடு மறந்து தொலைத்து விட்டேன்!
நீண்ட சவ ஊர்வலம்! சுய வுணர்வற்ற லீவர் இன்னமும் பெட்டியினுள் இருக்கக் கூடும்-உயிரோடு புதைக்கப் போகிறுர்கள் அவனை!


இதோ... இன்னும் சிறிது நேரத்தில் அவனை புதைத்து விடுவார்கள்... அவர்களை தடுத்து நிறுத்த எந்த உபாயமும் புலப்படவில்லையே!
நாட்டுக்காக உயிரை தியாகம் செய்த இளைஞனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாம் இங்கே குழுமியிருக்கிறோம்...
ஏற்கனவே பெட்டிக்குள்ளிருக்கும் காற்று கெட்டுப்போயிருக்கும்... இருக்கிற சிறு திறப்பையும் மூடிவிட்டார்களேயானால் சில நிமிடங்களுக்குள் லீவர் மூச்சுத் திணறி செத்துப் போய்விடுவான்!
சவப் பெட்டிக்குள்ளிருந்த லீவர் மயக்கவாயுவின் பிடியிலிருந்து மெள்ள விடுபட்டுக் கொண்டிருந்தான்—
நா... நான்—எங்கேயிருக்கிறேன்? இன்னமும் சவப் பெட்டிக்குள்ளேவா? சிறு திறப்பின் வழியாக உள்ளே மண் வந்து விழுகிறது—அப்படியானால்...


மூடியை திறக்க முடிய
வில்லை...ஆ...மூச்சு
முட்டுகிறது—எனக்கு
இப்படி ஒரு முடிவா...
ஊஹூம்—
லீவரின் மரண ஓலம் வெளியே
இருந்தவர்களுக்குக் கேட்கவே
யில்லை...
குட்பை...
இளைஞனே!
நல்ல பையன்—
ஹூம்!
உதவி...உதவி...
ஹா ஆ ஆ ஆ!
சவ அடக்கம் முடிந்துவிட்டது...
இம்மாதிரி ஒரு அநியாயம் ஒரு
நாய்க்குக்கூட ஏற்படக்கூடாது.
விரைந்து செயலாற்ற வேண்டும்
நான்!
குழிதோண்டுபவனை முதலில்
சமாளித்தாக வேண்டும்...
அஹ்...!


லீவர் எப்பொழுதும் என்னோடே இருக்க வேண்டும் என்று பிரைட் ஏன் பிடிவாதமாக இருந்தானோ தெரியவில்லை! இந்த சோனிப் பயல் நச்சுப் பாம்பு போன்றவன்! இந்நேரம் இவன் செத்தொழிந்திருந்தால் தலைவலி தீர்ந்தது என்று நினைப்பேன்!
மண்ணை அகற்றிய பின் பரபரப்போடு சவப்பெட்டியின் மூடியை நார்மன் அக்ற்றியபோது—
ஹா...ஹா...ஹ்... கா...கா...ற்று!
ஹலோ லீவர்! உன்னை தோண்டி வெளியே எடுக்க வேண்டியதை நினைத்தால் வருத்தமாய் உள்ளது... அத்தனை அழகான புதைப்பு விழாவை பாழ்படுத்தி விட்டேன்!
உன்னை—
ஆத்திரப்படாதே லீவர்...என்னை பழிவாங்க நினைத்தால் நான் மறுபக்கம் திரும்பியிருக்கும்போது முயற்சி செய்—அதுதானே உன் வழக்கம்!
புதைகுழி தோண்டுபவனுக்கு கொஞ்சம் பணம் கொடுத்து சரிக்கட்டினர்—
உன்னைப் பழிவாங்கத்தான் போகிறேன் நார்மன்—விரைவிலேயே! நீ கோயரிங்கை சமீபித்ததும் உன் இடைக்கச்சையிலுள்ள பிளாஸ்டிக் வெடிகளை தூண்டி வெடிக்கச் செய்யும் ஆற்றல் கொண்ட பட்டன் என் கைக் கடிகாரத்தில் இருக்கிறதை நீ அறியமாட்டாய்!


மெள்ள சூழ்ந்துவந்த இருளினூடே பதுங்கிப் பதுங்கி நடந்த இருவரும் ரோஹ்மர் கோட்டையை நெருங்கினர்...
அதோ...அந்த கோட்டையில் தான் கோயரிங் தங்கியிருக்கிறன்.
கோட்டைக்குச் செல்ல இருக்கக் கூடிய ஒரே ஒரு போக்குவரத்து வசதி இந்த 'கேபிள்-கார்' தான்...ஜெர்மானிய படைகளின் நடமாட்டம் இங்கே அதிகமாக இருக்கிறது...கோட்டையை நாம் சென்றடைவது அத்தனை சுலப்மான காரியமாக இருக்காது!




கோட்டையிலிருந்த ஜன்னல் ஒன்றின் பின்னால் நிற்கும் உருவம் சந்தேகத்திற்கு இடமின்றி கோயரிங்தான் என்று தெளிவாக காட்டியது நார்மனின் வசமிருந்த பைனாகுலர்...
கோட்டைக்கு நீ வரவேண்டிய அவசியமில்லை லீவர்...கோயரிங் மாதிரி ஒரு ஆசாமியை தனியொருவனாக சென்று தீர்த்துக் கட்டுவதில் உள்ள சுவாரஸ்யமே தனிதான்!
ஆனால் நான் போகுமுன் ஒரு விஷயம் - எனக்குத் தெரியாத ஏதோ ஒன்று உனக்கு தெரிந்திருக்கிறது என்பதாக என் உள்ளுணர்வு கூறுகிறது...
...அப்படிகூட இருந்தே குழிபறிக்கும் நோக்கம் ஏதாவது இருந்தால் அதை மூட்டைகட்டி வைத்துவிடு-இல்லையேல் கோயரிங்கின் கதையை முடித்த கையோடு உன்னைக் குறி வைத்து வருவேன்—ஜாக்கிரதை!
ஊஊஊ.. ப்!


கேபிள் கார் தேவையில்லே எனக்கு— என் உலோகக் கையே நன்ருக சறுக்கிக் கொண்டு போகிறது!
மிகுந்த பிரயாசையோடு கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து கோட்டையை சமீபித்து விட்டான் நார்மன்...
துப்பாக்கியில் கைவைக்கிருயா... உன்னை—
டுமீல்!
ஆஆ...!


கோட்டையின் கற்சுவரிலிருந்த பள்ளங்களை உலோகக் கரத்தினால் பற்றி மேலே ஏறலானான் நார்மன்.
இங்கே வேறு காவலாளிகள் யாரையும் காணோம்... அந்த மட்டிலும் அதிர்ஷ்டம்தான்!
கதவைத் தேடிக்கண்டுபிடித்து திறந்துகொண்டு உட்செல் வதில் ஆபத்து அதிகம்! கோட் டையின் மேலே செல்ல இது தான் சிறந்த வழி!
அங்கே—
மேஜர் பிரைட்டின் அனுமானம் மிகவும் சரியே...நாஜிகளின் மீது தீராத வெறுப்புக் கொண்ட நார்மனைத் தவிர வேறு யாரும் இத்தனை கடுமையான முயற்சியை மேற்கொள்ள மாட்டார்கள்...
அங்குலம் அங்குலமாக ஏறி மேலே வந்து சேர்ந்தான் நார்மன்...
அதோ இருக்கிறான் பயல்... இன்னும் ஒரிரு நிமிடங் களில் செத்தொழியப் போகிறான்!


இரும்புக்கரம் இருக்கும்போது இந்த கம்பி வலை எனக்கு ஒரு தடையே கிடையாது!
வந்தனங்கள் கோயரிங் தடியா! உன் வாழ்க்கையின் கடைசி நாள் இன்றே!
ஹே...யா... யார்—நீ?
எனக்கும் ஒரு கிளாஸில் மதுவை ஊற்று கோயரிங்... அப்படியே அதில் இரண்டு துண்டு ஐஸ் கட்டிகளையும் போடு!
பள்ளத்தாக்கின் மறு பக்கமிருந்த லீவர், நார்மனின் இடைக்கச்சையிலிருந்த வெடிகளை இயங்கச் செய்யும் விசை இருந்த தன் கைக் கடிகாரத்தை தொட்டான்!
இன்னும் ஓரடி...ஒரே ஓர் அடி அந்த அறையினுள் எடுத்து வை நார்மன்-இதுவரை எனக்கு நீ செய்த ஈனத்தனங்களுக்குரிய விலையை நீ கொடுக்கச் செய்வேன்!


எட்டி அருகேயிருந்த பிஸ்டலை எடுக்க முயன்ருன் கோயரிங்கின் சகா நார்மனின் சைலன்ஸர் பொருத்திய துப்பாக்கி ஒருமுறை இயங்கியது...
ஆஆ...!
தவறு உன்னுடையது தான்!
அங்கே லீவர் எந்த விஞடியும் பட்டனை அழுத்த தயாராக காத்துக் கொண்டிருந்தான்—
அப்படி வெடிகள் வெடித்தால் நார்மனும் அழிந்து போவான் என்பதும் நிச்சயிக்கப் பட்ட உண்மை...ஆனுல் அதைப்பற்றி யாரும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை!
நார்மன் இன்னும் கொஞ்சம் கோயரிங்கை நெருங்கும்வரை நான் பொறுத்திருக்க வேண்டும்!



அங்கே...கோட்டையினுள்—
ஊ...,ப்ப்!
அப்படியே மண்டியிட்டு உட்கார்...இல்லையேல் அடுத்த தோட்டா உன் மூளையை சிதறடித்துவிடும்!
என்னிடம் கருணை காட்டு! உன்னிடம் மன்றுடி கேட்டுக் கொள்கிறேன்—என்னைச் சுட்டு விடாதே!
எங்கே என் பூட்ஸை உன் நாக்காலேயே துடைத்து எடு பார்ப்போம்!


ஆனால்...மேலே வானில் தூக்கி எறியப்பட்ட நபர்-லீவர்தான்!
பட்டனை அழுத்த இதுவே தருணம்...!
ஆ...!
நார்மன்—இது உனக்கும் சேர்த்துத்தான்!
டமால்!
திக்பிரமையில் ஒரு கணம் தடுமாறிப் போன லீவருக்கு பின்னர்தான் உண்மை விளங்கியது...
...கேபிள் வழியாக செல்வதற்கு முன் நார்மன் இடைக் கச்சையை கழற்றி தன் பையில் வைத்து இங்கே விட்டுச் சென்றிருக்கிறான்- இன்னமும் நான் உயிரோடிருப்பது தெய்வச் செயல்தான்!
அங்கே...கோட்டையில்—
அதென்ன வெடிச் சப்தம்? லீவரின் வசம் வெடிக்கும் பொருள் ஏதும் கிடையாது... என் பையில் இருந்த பொருட்களில்- இடைக் கச்சை தவிர வேறு எதையும் சந்தேகப்படுவதற்கில்லை...



ஓகோ....அப்படியா சேதி! கேபிள் வழியாக வருமுன் கூடியவரை சுமையை குறைத்துக் கொள்ள எண்ணி நான் மட்டும் அந்த இடைக் கச்சையை அங்கே கழற்றி வைத்து விட்டு வந்திராவிடில்... சே!
என்னை அவர்கள் நம்பவில்லை... எனவே நடமாடும் வெடிகுண்டாக என்னை தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள்...விசை—லீவரின் வசம்!
எனக்கும் என் சகாவுக்குமிடையே ஒரு கணக்கை உடனடியாக நேர் செய்து கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது... இங்கிருந்து நான் வெளியேற உன்னையே பணயமாக பயன்படுத்த தீர்மானித்து விட்டேன்!
அகலமான படிக்கட்டு பிரதான நுழைவாசலை நோக்கி கீழே சென்றது...
ஹே...என்ன இது...?
துப்பாக்கியை எடுக்காதீர்கள்...இவன் ஒரு பிரிட்டிஷ் உளவாளி... கேபிள்காருக்கு செல்ல இவனை அனுமதியுங்கள்—இல்லையேல் என்னை சுட்டுவிடுவான்!


இல்லை...இந்தப் பன்றியை என்னால் சமாளிக்க முடியும்!
டுமீல்!
இது ஒரு எச்சரிக்கையாக அமையட்டும்...இந்த பன்றி பொல்லாதது— புரிந்து கொள்ளுங்கள்!


கேபின்—காரில்...
கேபின் காரை பாதியில் நிறுத் தினீர்களோ உங்கள் தளபதியை அப்படியே கீழே அதள பாதாளத்தில் தூக்கிப் போட்டு விடுவேன்... ஜாக்கிரதை!


உன் விஷமத்தனம் இன்னும் எவ்வளவு நேரம் தாக்குப் பிடிக் குமென்று நினைக்கிருய் நீ?
அதிர்ஷ்டம் என் பக்கம் இருக்கும் வரை!


ஆ...கேபிள் காரின் தளம் அப்படியே திறந்து கொண்டு விட்டதே!
உன் அதிர்ஷ்டம் இதோ... இத்தோடு முடிந்து விட்டது பார் கேபிள் காரில் உள்ள இரகசிய ஏற்பாட்டை நீ அறிய மாட்டாய்...பாவம்!


திறந்து கொண்டு தொங்கிய தளத்தின் கதவை உறுதியாக பற்றிக் கொண்டது நார்மனின் இரும்புக் கரம்!
உப்...!
இன்னும் எத்தனை நேரத்துக்கு அப்படியே நீ அங்கே தொங்கிக் கொண்டிருக்க முடியும் என்று நினைக்கிறாய்?
விமானப்படை தளபதியான எனக்கு நிச்சயமாகத் தெரியும் சிறகு இன்றி யாராலும் பறக்க முடியாது என்று! என்றாலும் அந்த உண்மையை இப்போது உன்னை வைத்து உறுதி செய்து கொள்ள விரும்புகிறேன்!


ஆங்காரத்தோடு முகம் சிவக்க நின்ற கோயரிங்கின் கையில் கோடாரி இருந்தது!
உலோகத்தினால் ஆனதுதான் என்றாலும் உன் கை இந்த ஒரு அடிக்குமேல் தாக்குப் பிடிக்க முடியாது என்று கருதுகிறேன்!
கோயரிங் வென்று விடுவான் போலிருக்கிறதே...
...நான உருப்படியாக ஏதாவது செய்தாக வேண்டும் உடனடியாக...
அஹ்!


சட்டென்று எம்பி கோயரிங்கின் காலை வாரிவிட்டான் நார்மன்... இப்படியொரு செயலை கொஞ்சமும் எதிர்பார்த்திராத கோயரிங் திறப்பின் வழியே கீழே சரிந்தான்- விழும்போது அனிச்சைச்செயலாக நார்மனை பற்றிக் கொள்ளத் தவறவில்லை!
உப்ப்!
இறு...க—இறுகப் பற்றிக் கொள்!
மறு முனையில், வெடிவிபத்தால் காயமடைந்து கிடந்த லீவரை ஜெர்மானிய வீரர்கள் கைது செய்தனர்...
ஏய்...சுடாதே! கீழே தொங்கிக் கொண்டிருப்பவர்— மார்ஷல்!


விரல்களில் வலி தாளவில்லை... பிடி தளர்கிறது—உடனடியாக எடையை நான் குறைத்துக் கொண்டாக வேண்டிய நிர்ப்பந்தம்...
தயவு செய்து கோடாரியை எடுக்காதே—ஜெர்மானியன் என்றாலும் நான் நல்லவன்—ஹிட்லர்தான் மோசமான பேர்வழி!


வீணாக அலட்டிக் கொள்ளாதே கோயரிங்—நீ உயிரோடு இருந்தால்தான் எனக்கு உபயோகமாக இருக்கும்!



தளக்கதவை இயக்கும் விசையை நோக்கி கோடாரியை வீசினன் நார்மன்...கதவு மெள்ள மேலெழும்பலாயிற்று...
இனியும் தொங்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை...
நானும் மேலே ஏறி வர ஒத்தாசை செய்...ஆஆ!
இடுக்கில் சிக்கிக் கொண்டு விட்டேன்...வலி பிராணன் போகிறது...காப்பாற்று-என்னை!
சும்மா கத்தாதே பொறு...வருகிறேன்!


கேபிள்—கார் மறுமுனையை சென்றடைந்ததும்...
என் தோழனை அந்தக் காரில் ஏற்றுங்கள்...கோயரிங்கின் பிரத்யேக விமான தளம் வரை தடையற்ற பயணத்துக்கு வகை செய்யுங்கள்-இல்லையேல்...கோயரிங் அரோகரா!
இவனுக்கு வெறிதான் பிடித்திருக்கிறது... இவன் சொல்கிறபடி செய்யுங்கள்—உடனே!
பின்னர்—மலைப்பகுதியிலிருந்த விமான தளத்தில்...
முதல் உலக மகாயுத்தத்தின் போது போர் விமானங்களை நீ மிக பிரமாதமாக ஓட்டியதாக கேள்விப்பட்டேன்...இங்கிலாந்துக்கு நாங்கள் திரும்ப, அதோ அங்கே தயாராக நிற்கும் விமானத்தை நீதான் ஓட்டிக் கொண்டு வரப் போகிறாய்!
நானா...? உன் முட்டாள்தனம் வரை கடந்து போய்க் கொண்டிருக்கிறது!
இரண்டுமணி நேரத்திற்குப் பின் விமானம் ஆங்கிலக் கால்வாயை நெருங்கிக் கொண்டிருந்தது...
விமானம் மேலெழும்பிய நேரம் முதற்கொண்டு இரண்டு ஜெர்மன் விமானங்கள் பின் தொடர்ந்து வருகின்றன...


நம்மை நோக்கி சுட ஆரம்பித்து விட்டனவே—என்ன இதெல்லாம்...?
நாம் இங்கிலாந்தை சமீபித்து விட்டோமல்லவா...அந்த விமானத்திலிருக்கும் எனது பைலட்டுகள் நான் பிரிட்டிஷாரின் கையில் அகப்பட்டுக் கொள்வதை சகித்துக் கொள்ளமுடியாமல் இப்படி செய்கின்றனர் என்று நினைக்கிறேன்!
தொடர்ந்து போய்க் கொண்டேயிரு...அவர்களை சமாளிக்க ஒரு தந்திரம் செய்கிறேன்!
ஒரு சில நிமிடங்களுக்குப் பின் ஒரு முரட்டு உருவம் பாராசூட்டை கட்டிக்கொண்டு விமானத்திலிருந்து கீழே குதித்தது.
மார்ஷல் கோயரிங்தான்! ஒப்பந்தப்படி இனி அந்த இரு பிரிட்டிஷ்காரர்களையும் அவர்கள் போக்கில் விட்டுவிட்டு நாம் திரும்பிவிட வேண்டும்!
87


அங்கே—நார்மன் கேலியாக சிரித்தான்...
சரியான குள்ள நரித்தனம்—மேலாடைகளின்றி விரைத்துப் போய்க் கொண்டிருக்கிறேன் நான்...!
உன் நிலை பரிதாபத்திற்குரியதுதான்! என்ன செய்வது—அந்த போலி உருவம் தயாரிக்க கைவசமிருந்த போர்வை துணிமணிகள் அனைத்தும் தேவைப்பட்டன! நேராக சென்று கொண்டேயிரு—நான் உள்ளே போய் என் சகாவை பார்த்துவிட்டு வருகிறேன்...
உன்னைக் கொல்ல எனக்கு எல்லா உரிமையும் இருக்கிறது லீவர்...ஆனால் ஏற்கனவே அரை உயிராகிக் கிடப்பவனை கொல்வது எனக்கு பெருமையளிக்கும் காரியமல்ல!
ஆனால்...இன்று உனக்கு நான் பிச்சையிடும் உன் உயிரைக்கேட்டு என்றாவது ஒருநாள் உன் வீட்டுக் கதவை தட்டுவேன்-அதுவரை சந்தோஷமாக வாழ்ந்து கொள்!
ஓ...ஓ! விமானம் தடுமாறுகிறது—ஏதோ கோளாறு போல தோன்றுகிறது!


அவர்கள் சுட்டபோது நம் விமானத்தின் எஞ்சினில் ஏதோ பழுது ஏற்பட்டிருக்க வேண்டும்—சீக்கிரமே விமானம் உயரமிழந்து விழுந்து நொறுங்கப் போகிறது—குதித்தால் தான் உயிர் பிழைக்கலாம்!
நாங்கள் பாராசூட்டை கட்டிக் கொண்டு குதிக்கும் வரை நீ இங்கேயே இருந்து விமானத் தை சீராக செலுத்த முயற்சி செய்து கொண்டிரு - நெற்றிப் பொட்டில் தோட்டா பாய் வதை நீ விரும்ப மாட்டாய் என்று எனக்குத் தெரியும்!
நீ…நீ…ரொம்பவும்தான் கல்நெஞ்சக் காரன்…! சரி…சரி போ…சீக்கிரம்!
நார்மனும், லீவரும் பாராசூட்டைக் கட்டிக்கொண்டு கீழே குதித்தனர்.
இருந்த மூன்று பாராசூட்டுகளும் பயன்படுத்தப்பட்டு விட்டன… இறுதியாக விமானம் கீழே விழுந்து நொறுங்கும்போது நீ உயிர் பிழைக்கப் போவதில்லை… கோயரிங்! நான் மேற்கொண்ட பணி அப்போது வெற்றிகரமாக முற்றுப் பெறும்!


அட...விமானம் சீராக மேலேறுகிறதே! அந்த பன்றிப் பயல் வகையாக ஏமாற்றிவிட்டான்...நம்மை! சே... எப்படிப்பட்ட முட்டாள்தனம்!
தன் வெற்றியை அடையாள மிட்டுக் காட்ட பிரான்ஸை நோக்கி பறக்கத் தொடங்கு முன் ஒரு குட்டிக் கரணம் அடிக்கிறான்...பார்!
கோயரிங்...தப்பி விட்டதாக கொக்கரிக்காதே...என்றாவது ஒரு நாள் மீண்டும் நான் உன்னை வந்து சந்திப்பேன்—அப்போது முடிவு வேறுவிதமாக இருக்கும் என்று உனக்கு நான் இப்போதே எச்சரிக்கிறேன!
இருவரும் கரையோரம் கிராமீயப் பகுதியில் தரையிறங்கினர்...
மரத்தில் மாட்டிக்கொண்டு விட்டேன்...கீழே வர உதவி செய்—நார்மன்!
நீயாகத்தானே அங்கே போய் மாட்டிக் கொண்டாய்... நீயாகவே முயற்சி செய்து இறங்கிக் கொள்!





லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன்,
முகவரி: ல்யன் காமிக்ஸ், த. பெ. 55, சிவகாசி - 626 123.
போன்: 1159. வெளியீடு எண்: 21. அச்சிட்டோர்:
முத்து பைன் ஆர்ட் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி - 626 123.

## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**S. V. A. K. புஷ்பவல்லி**

அமரத்துவம் அடைந்த நாள். **6-12-1983**

*இதய அஞ்சலி*

*—லயன் காமிக்ஸ்.*

## அறிவிப்பு!

நமது இதழ்களின் விலை அவ்வப்பொழுது மாறி வருவதால், சரியான சந்தா தொகையினை நிர்ணயிப்பது கடினமாக உள்ளது. மேலும் தனிப்பிரதிகளை தபாலில் அனுப்பும் பொழுது, பெரும்பான்மையான பிரதிகள் சரிவர வாசகர்களுக்குப் போய் சேருவதில்லை. ஆகையால் இனி புதிய சந்தாக்களை ஏற்றுக் கொள்ள இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி.

தங்களன்புள்ள,
நிர்வாகி,
**லயன் காமிக்ஸ்.**

# வாசகர் கடிதம்

● *ஸ்பைடர் ரசிகன், த. அறிவொளி, எல். ஜி. பி. வளாகம், திண்டுக்கல்.*

இரட்டை வேட்டையர்கள் தோன்றும் 'ஆப்பிரிக்க சதி'' — தூள் டக்கர். அரசன் பீட்டோ உகாண்டா முன்னாள் அதியர் இடி— அமீனை நினைவூட்டுகிறான். குலூகாவின் பெருந் தன்மை பாராட்டுக் குரியது.

ஸ்பைடரை நீண்ட நாட்களாகக் காணவில்லையே! பிடித்து வாருங்கள்!

● *தங்கள் வாசகன், K. ஹரி சங்கர், சேலம்-7.*

லயன் காமிக்ஸின் புதிய படைப்பான இரட்டையர்கள் தோன்றும் **''ஆப்பிரிக்க சதி''** கதாநாயகர்கள் என்னை பிரமிக்க வைத்தனர். ஆனால் இவர்களால் ஸ்பைடரையும், ஆர்ச்சியையும் விட்டு விடாதீர்கள். ஒரு வினை கபிஷ் தொடர்ந்து வருமா?

● *சிங்க ராஜாவின் பிரியன், ஜி. பி. முரளி, கோவை.*

ஏராளமான கதா நாயகர்களை அறிமுகப் படுத்தும் லயன் காமிஸ்க்கு என் பாராட்டுக்கள்! ''ஆப்பிரிக்க சதி''யில் குலூகாவிடம் பீட்டோ வணங்குவது டாப்! எப்பொழுதும் அராஜகம் அழியும் என்ற வாக்கை நினைவுப் படுத்தியது.

● *நந்திவர்மன். குருவை.*

ராம்போ திரைப்படம் பார்த்த மாதிரி இருந்தது... ''ஆப்பிரிக்க சதி''

● *R. கண்ணன். கோபிசெட்டிபாளையம்.*

இரட்டை வேட்டையர் தோன்றும் ''ஆப்பிரிக்க சதி'' மிகவும் அருமையாக இருந்தது. ஆனால் 39-ம் பக்கத்தில் இரட்டை வேட்டையர் நீர் நிரம்பிய ஸ்டேடியத்தின் மத்தியில் உள்ள சிறிய நிலப்பிரிவில் இறங்குகிறார்கள் அந்த நிலப்பரப்பில் நிறைய மரங்கள் உள்ளன. ஆனால் 44-ம் பக்கம் 2-ம் படத்தில் உள்ள நிலப்பரப்பில் மரங்கள் இல்லையே ஏன்?

தவறினை சுட்டிக் காட்டியமைக்கு நன்றி! இனிமேல் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்கிறோம்.

ஆ—ர்.


● *ராஜு நவி, 113, புஸ்ஸி வீதி, புதுவை-1.*

இதோ சென்ற இதழைப் பற்றிய என் கருத்து.

ஆப்பிரிக்காவில் சாகஸங்கள் நிகழ்த்தி தூள் கிளப்பி விட்டார்கள் இரட்டை உளவாளிகள். **லயன் காமிக்ஸில்** இடம் பெற போகும் ஹீரோக்களின் அறிவிப்பு படித்ததும், சர்க்கரை பந்தலில் தேன் மாரி பெய்தது போல் இருந்தது எனக்கு!


அடுத்த வெளியீடு!
ஸ்பைடர்
தோன்றும்..
சதுரங்க வெறியன்!
ரூ. 2/-
ஈகிள்மேன்
தோன்றும்...
மார்ச் வெளியீடு!
விசித்திரகடத்தல்
ரூ. 2/-


விரைவில் வருகிறது!
இரட்டை வேட்டையர்
தோன்றும்...
மர்ம எதிரி!



விரைவில் வருகிறது!
Mr. ஹெர்குலஸ்


இரும்புக்கை உளவாளி தோன்றும்
கொலைகார முதலை!
விரைவில் வருகிறது!


டெக்ஸ் வில்லர் தோன்றும்
பழி வாங்கும் பாவை!
விரைவில் வருகிறது!



விரைவில் வருகிறது!
டேஞ்சர் டயபாலிக் தோன்றும்
ஆழ்கடல் வேட்டை

ALARM SIGNAL
அப்பா! இந்தச் சங்கிலி எதுக்காக இங்கேயிருக் குப்பா?




ஒரு மிருகம் கூட கண்ணில் தட்டுப்பட வில்லையே!


விற்பனையாகிறது!
துடிதுடிப்பான சித்திரக் கதைகள் நிறைந்த...
திகில்!
காமிக்ஸ்
ஆசிரியர்: S. விஜயன்
விலை ரூ. 3/-
ஏஜெண்டுகள் தேவை!
விபரங்களுக்கு:
மாதம் ஒருமுறை உங்களை மயிர்க் கூச்செறிய செய்ய வருகிறது!
படிக்கத் தவறாதீர்கள்!
பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
த.பெ.எண்:374, சிவகாசி-626123. போன்: 1159, 159.